FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8323751

1. District : Kanchipuram PS: Vigilance & Anti corruption Kanchipuram Year: 2026 FIR No.: 06/AC/2026/KM Date: 23/09/2026 at 18.00hrs
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988, (as amended in 2018) Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: V/s. 7(a)
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 22.09.2026 Date to : Between 15.00hrs and 20.30hrs.
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 23.09.2026 Time : 17.00hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 23.09.2026 Time : 17.00hrs @ 18.00hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East. About 55 km, Kundrathur Municipality
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : - (b) Address : Lakshmipuram, Kundrathur, Kanchipuram District.
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt.V. Sathya (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Deputy Inspector cell officer (g) Address : O/o. the District collectorate, District Inspection Cell office, Kanchipuram, Thiruvallur & Chengalpet Districts, Kanchipuram
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tmt.C. Logeswari, W/o- Rajesh, Office Assistant to Commissioner, 2) Tr. K. Ramesh, S/o. Kannan, Fitter, Engineering section, Both are working at Kundrathur Municipality, Kanchipuram District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் -

[P.T.O]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Through G-pay transaction amount of Rs. 79,500/- is found during the surprise check.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR contents enclosed herewith Separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..... Vigilance Kanchipuram ..... as per jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23/9/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.09.2026 at 09.30 hrs.

Name: பெயர் R. Geetha
Rank: நிலை Inspector of Police, No. எண் .....
Vigilance and Anti-Corruption, Kanchipuram.

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

Accused Officers: 1) திருமதி.C.லோகேஷ்வரி. க/பெ. ராஜேஷ் (ஆணையரின் அலுவலக உதவியாளர்) குன்றத்தூர் நகராட்சி. காஞ்சிபுரம் மாவட்டம். 2) திரு.K.ரமேஷ் த/பெ. கண்ணன். Fitter, பொறியியல் பிரிவு. குன்றத்தூர் நகராட்சி. காஞ்சிபுரம் மாவட்டம்.	இன்று 23.09.2026-ம்தேதி 17.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம் அவர்களிடம் திருமதி.V.சத்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் & செங்கல்பட்டு மாவட்டங்கள், (இ) காஞ்சிபுரம் என்பவர் கொடுத்த புகார் மனுவின்மீது, கனம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் வழக்கு பதிவு செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் ஆகிய எனக்கு பரிந்துரை செய்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர், திருமதி.V.சத்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் & செங்கல்பட்டு மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம் பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், ந.க.எண்:- 182/2026, நாள் 23.09.2026,அய்யா, **பொருள்:-** திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அலுவலகம் - 22.09.2026 திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோரி கடிதம் கொடுத்தல் - தொடர்பாக, **பார்வை:** செயல்முறைகள், ந.க.எண்:- 182/2026, நாள் 22.09.2026, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில், பொதுமக்களிடமிருந்து கூடுதலாக வரி

வதூல் செய்வதாகவும், நகரமைப்பு அலுவலர்கள் மனை வரன்முறை படுத்துதல், கட்டிட வரைபட அனுமதி வழங்கவும், சுகாதார பிரிவில் பிறப்பு, இறப்பு போன்ற சான்றுகள் வழங்குவதற்காகவும் லஞ்சப்பணம் வதூலிப்பதாகவும் மற்றும் நகராட்சி பொறியியல் பிரிவில் சாலை அமைப்பு மற்றும் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றுதல், தெரு விளக்குகள் பராமரிப்பு, அரசு நிதி மற்றும் பொது நிதியில் இருந்து திட்ட செயலாக்கம்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

ஆகிய பணிகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் அதற்கு லஞ்சமாக பணம் வசூலிப்பதாக கிடைத்த இரகசிய தகவலின்பேரில், நேற்று(22.09.2026) எனது தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் இணைந்து இருதுறை இணைந்து திடீர் கூட்டாய்வு பிற்பகல் சுமார் 15.00 மணி முதல் இரவு சுமார் 20.30 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நகராட்சி ஆணையர் திருமதி.இரா.சுமா, நகரமைப்பு அலுவலர் செல்வி.எம்.ரித்திகா, கணக்காளர் திரு.பி.செந்தில்குமரன் மற்றும் இதர அலுவலக பணியாளர்கள், தற்காலிக பணியாளர்கள் ஆகியோர் இருந்தார்கள். இச்சோதனையில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்களின் செல்போனை ஆய்வு செய்தபோது, 1) திருமதி.ச.லோகேஷ்வரி, க/பெ.ராஜேஷ், ஆணையரின் அலுவக உதவியாளர் அவர்களின் செல்போன்/GPay எண்.7904642901-ற்கு, i) 02.09.2026-தேதியில் பணம் ரூ.10,000/-, ii) 01.09.2026-ந் தேதியில் பணம் ரூ.1,000/-ம் & iii) 17.09.2026-ந் தேதியில் பணம் ரூ.40,000/-ம் மொத்தம் **ரூ.51,000/-மும்** மற்றும் 2) திரு.K.ரமேஷ், த/பெ.கண்ணன், Fitter, Engineering Section அவர்களின் செல்போன்/GPay எண்.7639503547-ற்கு, i) 17.09.2026-தேதியில் பணம் ரூ.2,400/-, ரூ.2,400/-, ரூ.2,400/-, மற்றும் ii) 22.09.2026-ந் தேதியில் பணம் ரூ.11,100/-, 10,500/- என மொத்தம் **ரூ.28,800/-மும் ஆக மொத்தம் ரூ.79,800/-க்கு** சந்தேத்திற்கிடமாக UPI மூலம் பணம் வரப்பெற்றுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்ததில், அவர்கள் இருவரும் மேற்படி பணப்பரிவர்த்தனை தொடர்பாக சரியான விளக்கம் தெரிவிக்காததால் அவர்கள் கூகுல்பே மூலம் பெறப்பட்ட பணம் லஞ்சப் பணமாக இருக்கக்கூடும் எனத் தெரிவதால், மேற்படி இருவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து, இச்சோதனையில் கைப்பற்றப்பட்ட கீழ்கண்ட ஆவணங்கள் மற்றும் செயல்முறை ஆணை ஆகியவற்றை இத்துடன் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். sd, xxxx V.Sathya, 23.09.2026), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் & செங்கல்பட்டு மாவட்டங்கள், (இருப்பு) காஞ்சிபுரம் இணைப்பு - 1. திடீர் கூட்டாய்வு செயல்முறைகள் ந.க.எண்.182/2026, நாள் 22.09.2026, 2. அலுவலக பணியாளர்கள் திருமதி.ச.லோகேஷ்வரி மற்றும் திரு.K.ரமேஷ் ஆகியோரின் செல்போனில் இருந்து எடுக்கப்பட்ட கூகுள்பே மூலம் நடந்த பணப்பரிமாற்றம் தொடர்பான Screen shot நகல்கள் (2), 3. அலுவலக பணியாளர்கள் திருமதி.ச.லோகேஷ்வரி மற்றும் திரு.K.ரமேஷ் ஆகிய இருவரின் தன்னிலை விளக்கம் மற்றும் வாக்குமூலங்கள் (4).

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

4. குன்றத்தூர் நகராட்சியில் 21.09.2026-ந் தேதி வரிவசூல் செய்யப்பட்ட கட்டண விவரம் அடங்கிய Service wise Summary Sheet with Bank Receipt Vouchers, 5. குன்றத்தூர் நகராட்சியில் 22.09.2026-ந் தேதி வரிவசூல் செய்யப்பட்ட கட்டண விவரம் அடங்கிய Remitance Details. 6.அலுவலக பணியாளர்களின் செப்டம்பர் மாத-2026 வருகைப்பதிவேடுகள் -1)பொதுப்பிரிவு. 2)தூய்மைப் பணியாளர்கள். 3) பொறியியல் பிரிவு. 4) பொதுசுகாதாரப் பிரிவு மற்றும் வருவாய் பிரிவு. Received a complaint on 23.09.2026 @ 17.00 hrs and after obtaining permission from DVAC, Chennai, Inspector Tr.R.Geetha for n/a and register a case, sd, xxxx (K.V.KALAISELVAM, 23.09.2026, DSP, V&AC, Chengalpet, I/c.KPM), காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், லாலாசத்திரம் ரோட்டில் அமைந்துள்ள, குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில், பொது மக்களிடமிருந்து கூடுதலாக வரி வசூல் செய்வதாகவும், நகரமைப்பு அலுவலர்கள் மனை வரன்முறை படுத்துதல், கட்டிட வரைபட அனுமதி வழங்கவும், சுகாதார பிரிவில் பிறப்பு, இறப்பு போன்ற சான்றுகள் வழங்குவதற்காகவும் லஞ்சப்பணம் வசூலிப்பதாகவும் மற்றும் நகராட்சி பொறியியல் பிரிவில் சாலை அமைப்பு மற்றும் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றுதல், தெரு விளக்குகள் பராமரிப்பு, அரசு நிதி மற்றும் பொது நிதியில் இருந்து திட்ட செயலாக்கம் ஆகிய பணிகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் கிடைத்த ரகசிய தகவலின்பேரில், குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தில், இன்று 22.09.2026-ம் தேதி பிற்பகல் சுமார் 15.00 மணி முதல் மேற்கொள்ளப்பட்ட இருதுறை சேர்ந்து திடீர் கூட்டாய்வு செய்தபோது நடைபெற்ற நிகழ்வின் விவரம் பின்வருமாறு. இன்று 22.09.2026-ந்தேதி பிற்பகல் சுமார் 15.00 மணியளவில் இரு துறை தணிக்கையாக குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே சென்று நகராட்சி ஆணையர் அலுவலக அறைக்கு சென்றபோது, அப்போது அங்கு நகராட்சி ஆணையர் திருமதி.இரா.சுமா என்பவர் அவரது இருக்கையில் பணியிலிருந்தவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், என்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் ஆய்வாளர்கள் திரு.V.தேவநாராயணன், திருமதி.R.கீதா, சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா மற்றும் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு, அலுவலக சோதனைக்கு வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அனைவரின் அடையாள அட்டையை காண்பித்தும், அவர்களுக்கு முன்பாக நாங்கள் அனைவரும் சுயபரிசோதனை செய்து காண்பித்து, சோதனைக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டேன், பின்னர் மேற்படி நகராட்சி அலுவலகமானது, கிழக்கு பார்த்தவாறு தலைவாசல் அமைந்திருந்தது, மேற்படி அலுவலகத்தில் தரைதளத்தில்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

உள்ள ஆணையரின் அலுவலக அறையினை சோதனை செய்தபோது, ஆணையரின் உறண்பேகில் பணம் ரூ.1,570/- இருந்தது. அது பற்றி விசாரிக்க, அவர் தனக்கு Sugar & Thyroid நோய்கள் உள்ளதாகவும், அதற்கு மருந்து வாங்க செலவிற்கு கொண்டுவந்ததாக தெரிவித்தார், எனவே அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்பு ஆணையர் அறைக்கு முன்பாக இருந்த அலுவலக கேபின்களை சோதனை செய்தபோது, அங்கு பணியிலிருந்த பணியாளர்கள் விவரம் பின்வருமாறு.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திரு.லேகேஷ்வரன், வரைவாளர், பொறியியல் பிரிவு.	ரூ.20/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.சுரேஷ்கிருஷ்ணா, பணி ஆய்வாளர், பொறியியல் பிரிவு.	ரூ.50/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி.அன்பரசி, Data Entry Operator (Out Sourcing)	ரூ.40/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.சரஸ்வதி, Data Entry Operator (Out Sourcing)	ரூ.700/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.லேகேஷ்வரி, ஆணையரின் அலுவலக உதவியாளர்	ரூ.500/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேலும், ஆணையர் அறைக்கு பக்கத்தில் இருந்த மேலாளரின் அறையினை நகராட்சி ஆணையர் முன்னிலையில் சோதனை செய்தபோது, மேலாளர் திரு.சந்துரு விடுப்பில் இருப்பதாகவும், திரு.அசோக், உதவியாளர் என்பவர் மேலாளர் பொறுப்பினை வகிப்பதாகவும் தெரிவித்தார், பின்பு மேலாளர் அறைக்கு பக்கத்தில் இருந்த வரி வசூல் மையத்தினை சோதனை செய்தபோது, அங்கு இளநிலை உதவியாளர்கள் திருமதி.ஆர்த்தி மற்றும் திருமதி.சந்தியம்மாள் ஆகியோர்கள் இருந்தார்கள், அவர்களை விசாரிக்க திருமதி.ஆர்த்தி என்பவர் கட்டணம் வசூலிப்பவர் என்றும், நேற்று (21.09.2026-ந்தேதி) சொத்து வரி, காலிமனை வரி, தொழில்வரி, குடிநீர்வரி மற்றும் இதர கட்டணங்களை பொதுமக்களிடமிருந்து வசூலித்த தொகை ரூ.3,15,966/-ஐ, வங்கியில் நகராட்சி கணக்கில் செலுத்த வைத்திருப்பதாகவும்.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அதற்கான Service wise Summary Sheet, with Bank Receipt Vouchers ஐ காண்பிக்க. அதனை மேற்படி பணத்துடன் சரிபார்த்து. பின்பு அதனை நகல் எடுத்து (13 தாள்கள்). அதில் ஆணையரால் சான்றொப்பமிட்டு வழங்கியதை விசாரணைக்காக கைப்பற்றினேன். அதேபோல் இன்று 22.09.2026-ந்தேதி வசூலான வரி மற்றும் இதர கட்டணம் தொகை குறித்து கேட்டபோது. அதற்கான Remitance Details, Dt:22.09.2026-ஐ கணினியிலிருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்ததை. நகல் எடுத்து. (4 தாள்கள்). அதில் ஆணையரால் சான்றொப்பமிட்டு வழங்கியதை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி Remitance Details-ஐ பார்வையிட்டதில் அதில் 1) பணம் ரூ.1,22,733/-, 2) காசோலை ரூ.21,627/- & 3) ECS மூலம் ரூ.1,250/- ஆக மொத்தம் ரூ.1,45,610/- கட்டணம் வசூல் செய்யப்பட்டிருந்தது. மேலும் வசூலிக்கப்பட்ட பணத்தினை சரிபார்த்து. மேற்படி வரி வசூல் மற்றும் இதர கட்டணத்தொகைகள் ரூ.3,15,966/- மற்றும் ரூ.1,22,733/- ஆகிய இரண்டினையும். ஆணையர் முன்னிலையில் இளநிலை உதவியாளர் திருமதி.ஆர்த்தி அவர்களிடம் நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் சோதனையின்போது. திருமதி.G.ஆர்த்தி அவர்களிடம் பணம் ரூ.200/- இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.சந்தியம்மாள் அவர்களை சோதனை செய்ய பணம் ரூ.140/- இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு. வரிவசூல் மையத்திற்கு எதிரில் அமைந்துள்ள பொதுப்பிரிவு அறையினை சோதனை, செய்தபோது. திருமதி.ஏசம்மாள். உதவியாளர் (C-1, Establishment Section) என்பவரிடம் ரூ.50/- இருந்தது. அப்பணம் தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு பொதுப்பிரிவு அறைக்கு பக்கத்தில் இருந்த கணக்கு பிரிவு அறையினை சோதனை செய்தபோது. அங்கு திரு.செந்தில்குமரன். கணக்காளர் என்பவரிடம் பணம் ரூ.1,120/- இருந்தது. அப்பணம் தனது பழுதடைந்த இருசக்கர வாகனத்தினை பழுதுபார்க்க செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால். அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.அசோக். உதவியாளர் என்பவரிடம் பணம் ரூ.480/- இருந்தது. அப்பணம் தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால். அப்பணம் திரும்ப

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் கணக்கு பிரிவு அறைக்கு பக்கத்தில் இருந்த வருவாய் பிரிவு அறையினை சோதனை செய்தபோது. அங்கு பணியிலிருந்தவர்களின் விவரம் பின்வருமாறு.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	செல்வி.சரண்யா, வருவாய் உதவியாளர்.	ரூ.800/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.வின்னரசி, வருவாய் உதவியாளர்.	ரூ.40/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.ஆனந்த், இளநிலை உதவியாளர்.	ரூ.30/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.அருண்குமார், அலுவலக உதவியாளர் / இரவு பாதுகாவலர்	--	பணம் ஏதும் இல்லை.
5.	திரு.வடிவேலன், நகரமன்ற தலைவரின் அலுவலக உதவியாளர்.	--	பணம் ஏதும் இல்லை.

பின்னர் ஆணையர் அவர்களை அழைத்துக்கொண்டு, விஜிலன்ஸ் குழுவினர் சகிதம் நகராட்சி அலுவலகத்தின் முதல் மாடிக்கு சென்று, பொறியியல் பிரிவு அறையினை சோதனை செய்தபோது, அங்கு உதவி செயற்பொறியாளர் இல்லை. அவர் இன்று ஒருநாள் தற்செயல் விடுப்பில் சென்றிருப்பதாக ஆணையர் தெரிவித்தார். பின்பு பொறியியல் பிரிவு அறைக்கு பக்கத்தில் இருந்த பொதுப்பணி மேற்பார்வையாளர் அறையினை சோதனை செய்தபோது, அங்கு திரு.ரங்கசாமி, பணிமேற்பார்வையாளர் என்பவரிடம் பணம் ரூ.160/- இருந்தது. அப்பணம் தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.ஜெகதீஷ்வரி, Data Entry Operator (Out Sourcing) என்பவரிடம் பணம் ரூ.10/- இருந்தது. அப்பணம் தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் பொதுப்பணி மேற்பார்வையாளர் அறைக்கு பக்கத்தில் நகரமைப்பு பிரிவு அறையில் பணியிலிருந்த பணியாளர்களின் விவரம் பின்வருமாறு.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	செல்வி.ரித்திகா, நகரமைப்பு அலுவலர்	ரூ.150/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.பாலாஜி, நகரமைப்பு ஆய்வாளர்.	ரூ.110/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேலும் மேற்படி அறைகளுக்கு எதிரில் இருந்த Hall-ல் பணியிலிருந்த பணியாளர்களின் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திரு.ராம்குமார், இளநிலை உதவியாளர், நகரமைப்பு பிரிவு.	ரூ.340/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.பழனி செல்வம், எலக்ட்ரீசியன், பொறியியல் பிரிவு	ரூ.100/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி.அருணா, DBC Staff (Out Sourcing)	ரூ.130/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.ரமேஷ், Fitter,	ரூ.20/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.கௌரி, இளநிலை உதவியாளர், பொறியியல் பிரிவு	ரூ.230/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
6.	திருமதி.தீபலட்சுமி, DBC Staff, Water Supply Section.	ரூ.40/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
7.	திருமதி.சத்தியகலா, பரப்புரையாளர், (ஒப்பந்த பணியாளர்)	--	பணம் ஏதும் இல்லை.
8.	திரு.மணிகண்டன், DBC Staff, Health Section.	ரூ.120/-	தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அப்பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

9.	திருமதி.தமிழ்செல்வி. தொழில்நுட்ப உதவியாளர். மக்கள் தொகை கணக்கெடுப்பு. (தற்காலிக பணியாளர்)	--	பணம் ஏதும் இல்லை.

மேற்படி Hall-ல் இருந்த சுகாதார ,பிரிவு அறையினை சோதனை செய்தபோது. அதில் திரு.பால்பாண்டி. சுகாதார ஆய்வாளர் என்வரிடம் பணம் ரூ.250/- இருந்தது. அபப்பணம் தனது சொந்த செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்ததால். அப்பணம் திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பணியிலிருந்த மேற்படி பணியாளர்களின் செல்போனில் கூகுல்பே மற்றும் போன்பே கணக்குகளை ஆய்வு செய்ததில். சந்தேகப்படும்படியான பணப்பரிமாற்றம் கீழ்கண்டவாறு கண்டறியப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

வ.எண்	பணியாளர் பெயர் & Cell Phone / GPay எண் விவரம்	பணம் பெற்ற தேதி	தொகை
1.	திருமதி.ச.லோகேஷ்வரி. க/பெ.ராஜேஷ். ஆணையரின் அலுவக உதவியாளர். குன்றத்தூர் நகராட்சி. செல்போன் / GPay எண்.7904642901	02.09.2026	ரூ.10,000/-
		01.09.2026	ரூ.1,000/-
		17.09.2026	ரூ.40,000/-
		மொத்தம்	ரூ.51,000/-
2.	திரு.K.ரமேஷ். த/பெ.கண்ணன். Fitter, Engineering Section, குன்றத்தூர் நகராட்சி. செல்போன் / GPay எண்.7639503547	17.09.2026	ரூ.2,400/-
			ரூ.2,400/-
			ரூ.2,400/-
		22.09.2026	ரூ.11,100/-
			ரூ.10,500/-
		மொத்தம்	ரூ.28,800/-
		ஆக மொத்தம்	ரூ.79,800/-

மேற்படி 1) திருமதி.ச.லோகேஷ்வரி. ஆணையரின் அலுவலக உதவியாளர் மற்றும் 2) திரு.K.ரமேஷ். Fitter, Engineering Section, ஆகியோர்களின் செல்போனின் கூகுல்பே கணக்கினை ஆய்வு மேற்கொண்டதில் மேற்கண்டவாறு சந்தேகப்படியான பணப்பரிவர்தனையை ஸ்கிரீன்சாட் எடுத்து. அலுவலக கணினியில் தனித்தனியாக (4 தாள்கள்) பிரிண்ட் எடுத்து.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அதில் மேற்படி பணியாளர்கள், நகராட்சி ஆணையர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி பணப்பரிமாற்றம் தொடர்பாக விசாரணை செய்ததில், திருமதி.லேகேஷ்வரி என்பவர் கடனாக கொடுத்த ரூ.11,000/- தொகையை திரும்ப கூகுல்பே மூலமாக பெற்றதாகவும், மேலும் செலவிற்கு பணம் எடுத்து கொடுக்கவேண்டி கூகுல்பே மூலமாக ரூ.40,000/- அனுப்பியதை தான் ATM-ல் இருந்து எடுத்து கொடுத்தாகவும் தெரிவித்தார், மேலும் திரு.K.ரமேஷ் என்பவர் குடிநீர் கட்டணம் செலுத்துவதற்காக பொதுமக்களிடமிருந்து கூகுல்பே மூலமாக பெற்று, காசாக்கம் செய்து, பணம் செலுத்தியவர்கள் பெயரில் அரசு கணக்கில் செலுத்தியதாக தெரிவித்தார், மேலும் மேற்படி பணியாளர்கள் 1) திருமதி.ச.லோகேஷ்வரி, ஆணையரின் அலுவலக உதவியாளர் மற்றும் 2) திரு.K.ரமேஷ், Fitter, Engineering Section, ஆகியோர்களின் விளக்க கடிதம் பெறப்பட்டு, என்னால் மேற்படி பணியாளர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1) பொதுப்பிரிவு பணியாளர்களின் வருகை பதிவேடு செப்டம்பர்-2026 (4 தாள்கள்), 2) பொது சுகாதாரம் மற்றும் வருவாய் பிரிவு பணியாளர்களின் வருகை பதிவேடு செப்டம்பர்-2026 (4 தாள்கள்), 3) பொறியியல் பரிவு பணியாளர்களின் வருகை பதிவேடு செப்டம்பர்-2026 (3 தாள்கள்), 4) தூய்மை பணியாளர் வருகை பதிவேடு செப்டம்பர்-2026 (3 தாள்கள்) ஆகியவற்றினை நகலெடுத்து, ஆணையர் அவர்களால் சான்றொப்பமிட்டு வழங்கியதை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அலுவலகத்தில் **"லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்"** என்ற அறிவிப்பு பலகை வைக்கப்படவில்லை, மேலும் அலுவலத்தில் இருந்த பணியாளர்களுக்கு, அவர்களது பணிக்கு எந்தவித இடையூறும் செய்யாமலும், அலுவலகத்தில் இருந்த எந்த பொருட்களுக்கும் சேதம் ஏற்படாமலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின் போது யாருக்கும் எந்தவித மன உளைச்சலும் கொடுக்கவில்லை. அலுவலக பணியிலிருந்த பெண் பணியாளர்களை காவல் ஆய்வாளர் திருமதி.கீதா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா ஆகியோர் மூலம் சோதனை செய்யப்பட்டது. மேற்படி சோதனையின்போது ரொக்க பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி குன்றத்தூர் நகராட்சி அலுவலகத்தை நல்ல முறையில் நகராட்சி ஆணையர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.06/AC/2026/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

22.09.2026ந்தேதி பிற்பகல் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

Tmt.R.Suma, Commissioner, Kundrathur Municipality, Kanchipuram District.	**Selvi.M.Rethika, Town Planning Officer, Kundrathur Municipality, Kanchipuram District.**	**Tr.B.Senthil Kumaran, Accountant, Kundrathur Municipality, Kanchipuram District.**
Tmt.G.Arthi, Junior Assistant, Tax Collection Counter, Kundrathur Municipality, Kanchipuram District.	**Tmt.C.Lokeshwari, Office Assistant, Kundrathur Municipality, Kanchipuram District.**	**Tr.K.Ramesh, Fitter, Engineeing Section, Kundrathur Municipality, Kanchipuram District.**
Tmt.R.Geetha Inspector of Police, V & AC, Kanchipuram	**Tr.V.Devanarayanan, Inspector of Police, V & AC, Kanchipuram.**	**Tmt.V.Sathya, District Deputy Inspection Cell Officer, Kanchipuram, Thiruvallur & Chengalpet @ Kanchipuram**

Received a copy, sd, xxxx (இரா.சுமா), 22.09.2026, MC/Kndr.

Honoured Sir,

On endorsement of DSP, V&AC, Kanchipuram, I received a complaint and registered a case in Kanchipuram V&AC, Cr.No.06/AC/2026/KM, u/s.7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 23.09.2026 at 18.00 hrs. and tookup the investigation.

The original FIR along with complaint enclosed with the Proceedings of the District Deputy Inspection Cell Officer Tmt.V.Sathya & connected documents seized at Kundrathur Municipality, Kanchipuram District are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Kanchipuram and other copies are submitted to superior officer concerned.

23/09/2026
DSP/V&AC
Kanchipuram.